## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

லங்கா ஹொஸ்பிட்டல் டயக்நொஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டின் (''கம்பனி'') மற்றும் அதன் துணைக்கம்பனிகளினதும் (''குழுமம்'') மற்றும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 முக்கிய கணக்காய்வு விடயங்கள்

முக்கிய கணக்காய்வு விடயங்களானது எனது தொழில்முறை மதிப்பீட்டின் போது, நடைமுறை ஆண்டின் போது கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கணக்காய்வில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும். கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக எனது கணக்காய்வின் பின்னணியில் இந்த விடயங்கள் முன்வைக்கப்பட்டன, மேலும் இந்த விடயங்கள் தொடர்பாக எமது அபிப்பிராயத்தை உருவாக்கும் போது இந்த விடயங்களில் நான் தனியான கருத்தை வழங்குவதில்லை.

- **வருமானத்தை இனங்காணுதல்**

குறிப்பு 4.15 - கணக்கீட்டுக் கொள்கை மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 5 ஐ பார்க்கவும். 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தொகுதியின் வருமானம் ரூபா 12,419 மில்லியனாகும்.

| இடர் விபரம் | எமது பதிலளிப்பு |
| --- | --- |
| குழுமத்தின் சுகாதார பராமரிப்பு சேவைகள் மூலம் ஈட்டப்படும் வருமானம் குறிப்பு 5 இல் தொடர்புடைய கணக்கீட்டுக் கொள்கையுடன் சேர்த்து | எனது கணக்காய்வு நடைமுறைகளில் ஏனையவற்றிற்கு இடையே பின்வருவன உள்ளடங்கியுள்ளது ;<br><br>➢ மாதிரி அடிப்படையிலான சோதனை, |

4.15 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. விலையிடல் கட்டமைப்பின் சிக்கலான தன்மை, அதன் அதிக அளவு, சில ஏற்பாடுகளில் வருமானத்தை இனங்காணுதலின் மொத்த அல்லது தேறிய அடிப்படையின் சரியான தன்மையை தீர்மானித்தல் மற்றும் ஐவு கட்டுப்பாடுகளை நம்பியிருத்தல் ஆகியவற்றின் காரணமாக வருமானத்தை கவனம் செலுத்தும் பகுதியாகக் கருதினேன்.

பரிவர்த்தனை நிலை விலையிடல் மற்றும் பொருந்தக்கூடிய ஆவணச் சான்றுகள் ஆகியவற்றின் மூலம் வருமான அளவீட்டின் மீது கணக்காய்வு நடைமுறைகளை நான் மேற்கொண்டேன்.

- ஆலோசகர் மருத்துவ ஆளணியினர் சம்பந்தப்பட்ட ஒப்பந்த ஏற்பாடுகள் தொடர்பாக முகாமைத்துவத்துடன் கலந்துரையாடினேன், மொத்த அல்லது தேறிய அடிப்படையில் வருமானத்தை இனங்காண்பதன் சரியான தன்மையை மாதிரி அடிப்படையில் சோதித்தேன்.
- வருமானத்தை பற்றிய முக்கிய தகவல் தொழில்நுட்பம் மற்றும் கைமுறைக் கட்டுப்பாடுகள் பற்றிய புரிதலைப் பெற்று, அதை மாதிரி அடிப்படையில் சோதித்தேன்.
- தொகுதியின் வணிகம் மேற்கொள்ளப்படும் இடங்களின் மாதிரியை உள்ளடக்கிய வருமானம் தொடர்பான காசு சேகரிப்புக்கள் மீது குறிப்பிட்ட கணக்காய்வு நடைமுறைகளை நான் செய்துள்ளேன்.
- நிதிக்கூற்றில் உள்ள குறிப்பு 5 இல் மேற்கொள்ளப்பட்ட வெளிப்படுத்தல்களின் போதுமான தன்மையை நான் மதிப்பீடு செய்தேன்.

- **சரக்கிருப்புக்களின் முன் கொண்டுசெல்லும் பெறுமதி**

குறிப்பு 4.8 - கணக்கீட்டுக் கொள்கை மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 16 ஐ பார்க்கவும். தொகுதி 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 862 மில்லியன் சரக்கிருப்புக்களை குறைந்த கிரயத்தில் அல்லது தேறிய நிகரக்கூடிய பெறுமதியில் கொண்டு சென்றது.

**இடர் விபரம்**

சரக்கிருப்புக்களின் மதிப்பீடு என்பது தயாரிப்புகளின் தன்மை மற்றும் கடுமையான தரத் தேவைப்பாடுகள் ஆகியவற்றின் காரணமாக தீர்ப்பு மற்றும் மதிப்பீடுகளை உள்ளடக்கியது. வணிக மாதிரியின் அடிப்படையில் தொகுதி செயற்பாடுகளுக்குள் சரக்கிருப்புக்களின் ஒதுக்கீடு மற்றும் விற்பனையின் காரணமாக, சரக்கிருப்புக்களின் இருக்கும் தன்மை மற்றும் மதிப்பீடு ஆகிய இரண்டும் முக்கிய கவனம் செலுத்தும் பகுதிகளாகும்

**எமது பதிலளிப்பு**

எனது கணக்காய்வு நடைமுறைகளில் உள்ளடங்கியது தொகுதியின் சரக்கிருப்பு வழங்கல் கொள்கையுடன் அறிக்கையிடல் திகதியில் சரக்கிருப்புக்களை வழங்குவதற்கான போதுமான தன்மை மற்றும் நிலைத்தன்மையை மதிப்பிடுதல்.

- மாதிரி அடிப்படையில், தொகுதியின் சரக்கிருப்புக்களின் கொண்டுசெல்லும் தொகையை அந்த சரக்குகளின் நிகர உணர்தல் மதிப்புடன் ஒப்பிடுதல்.
- ஆண்டு இறுதியில் உள்ளவாறு பௌதீக மெய்மையாய்வின் மூலம் சரக்கிருப்புக்களின் இருக்கும் தன்மையை சோதித்தல் மற்றும் தொகுதி நிறுவனங்களுக்குள் கிரய ஒதுக்கீட்டை சரிபார்த்தல்.

- **வியாபார பெறவேண்டியவைகளின் அறவீட்டுத்தன்மை**

குறிப்பு 4.9.1 - கணக்கீட்டுக் கொள்கை மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு 17 ஐ பார்க்கவும். 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொகுதியின் வியாபார பெறவேண்டியவைகள் ரூபா 577 மில்லியனாகும்.

| இடர் விபரம் | எமது பதிலளிப்பு |
|---|---|
| முகாமைத்துவத் தீர்ப்பின் அடிப்படையில் தொகுதியின் வியாபார பெறவேண்டியவைகளை அறவிடுவதற்கான மதிப்பீடு உள்ளடங்குகிறது. வரலாற்று கொடுப்பனவு முறைகள் மற்றும் வாடிக்கையாளர்களின் கடன் தகுதி தொடர்பான ஏனைய தகவல்கள். உள்ளார்ந்த அகநிலை என்பது, வியாபார பெறவேண்டியவைகளின் அறவீட்டை தீர்மானிப்பதற்கு கடன் இடர் வெளிப்பாடுகள் தொடர்பாக தீர்ப்புக்களை வழங்குவதில் ஈடுபட்டுள்ளது. | எனது கணக்காய்வு நடைமுறைகளில் உள்ளடங்கியுள்ளது -<br><br>➢ கடன் விதிமுறைகள் தொடர்பான கட்டுப்பாடுகள் உட்பட தொகுதியின் கடன் கட்டுப்பாட்டு நடைமுறைகளை சோதித்தல் மற்றும் வாடிக்கையாளர்களுக்குரிய கொடுப்பனவு வரலாறு மற்றும் நிதித் தகவல்களை மதிப்பாய்வு செய்தல்.<br><br>➢ 2023 திசெம்பர் 31 மீதிகள் தொடர்பான ஆண்டு இறுதிக்குப் பின்னர் காசுப் பெறுவனவுகளை சோதித்தல் மற்றும்<br><br>➢ மேற்கொள்ளப்பட்ட தீர்ப்புக்கள் மற்றும் தொடர்புடைய வாடிக்கையாளர் களுடனான வரலாற்று வர்த்தக அனுபவத்தை மதிப்பிடுவதன் மூலம் வியாபார பெறவேண்டியவைகளிற்கு எதிராக தொகுதியின் நட்டக்கழிவு ஏற்பாடுகளின் போதுமான தன்மையை சோதித்தல்.<br><br>➢ நட்டக்கழிவு ஏற்பாட்டின் போது பெற்றுக்கொள்வதில் ஈடுபட்டுள்ள மதிப்பீட்டின் அளவு குறித்த தொகுதியின் வெளிப்படுத்தல்களின் போதுமான தன்மையை மதிப்பீடு செய்தல். |

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, குழுமம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது குழுமத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

குழுமத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் குழுமத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு குழுமம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.5 கணக்காய்வின் நோக்கெல்லை**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி குழுமத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு குழுமத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது

அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் குழுமத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்குளசாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- குழுமத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- குழுமத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் குழுமம் இணங்கியிருந்ததா என்பதும்,
- குழுமம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- குழுமத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.6 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்

| கணக்காய்வு விடயம் | | | | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | விடயம் | நிதிக்கூற்றின் பிரகாரம் பெறுமதி | தொடர்புடைய பதிவேடுகளின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | | |
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | | |
| (அ) | நிலையான சொத்துக்கள் (8 உருப்படிகளின் கூட்டுமொத்தம்) | 5,625.26 | 4,669.98 | 955.28 | வேறுபாடுகள் வரலாற்று ரீதியானவை மற்றும் 2012 இற்கு முன்னர் இனங்காணப்பட்ட ஆவணங்களின் பகுதியளவு பற்றாக்குறையால் வேரூன்றி புதிய | வேறுபாட்டைக் கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | முகாமைத்துவம் 2008 இல் இருந்து மாறியது.கணக்காய்வாளர் களுடன் கலந்தாலோசித்து இந்த சிக்கல் ஆவணப்படுத்தப்பட்டது. | |

**1.7 பொருத்தமற்ற பெறுமதியிடல்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | **இருப்புக்கள் - மருத்துவ பொருட்கள்** | | |
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி கூற்றுக்களின் பிரகாரம் மருந்துகளின் இருப்பு பெறுமதியல் உள்ள ரூபா. 531,429,923 மற்றும் ரூபா. 48 மில்லியன் பெறுமதியான மருந்துப் பொருட்கள், மருந்துகளை வாங்குவதில் வர்த்தக தள்ளுபடியாக விநியோகத்தர்களால் வழங்கப்பட்ட இருப்புக்கள் மூலம் வியாபார கழிவுகளாக பெறப்பட்டவையாகும். மேலே உள்ள இருப்பு பெறுமதியில் பூஜ்ஜிய பெறுமதியில் இவை சேர்க்கப்பட்டுள்ளது. இந்த மருந்துகளின் GRN பெறுமதி பூஜ்ஜியமாக இருந்தபோதிலும், மருந்துகளின் அதிகபட்ச சில்லறை விலை (MRP) ஆனது அவற்றின் வெளியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது, மேலும் நிதி கூற்றுக்களில் உள்ள இருப்பின் பெறுமதிக்குள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனவே மருந்துப் பொருட்களின் இருப்பு பெறுமதி ரூபா. 48 மில்லியன் குறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | இலவச மருந்து பொருட்களின் இருப்புப் பெறுமதி குறிப்பு எண் 16 இன் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம், இருப்புக்களின் பெறுமதி அதன் கிரயம் அல்லது நிகர தேறத்தக்க பெறுமதி என்பவற்றில் எது குறைவாக இருக்கின்றதோ அதில் மதிப்பிடப்படல் வேண்டும். இருப்பின் பெறுமதியினை கணக்கிடுவதில் அந்த இலவசப் பொருட்களையும் எடுத்துக் கொண்டால், இருப்பின் பெறுமதி அதிகமாகக் குறிப்பிடப்படும். SLFRS இன் பிரகாரம் இருப்புக்களை பதிவு செய்வதில் தவறு ஏற்படும். | இருப்புக்களின் நியாய பெறுமதி நிதி கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | 2023ஆம் ஆண்டு காலாவதியான மருந்துகளின் பெறுமதி ரூபா. 6,600,998 ஆகும் மற்றும் காலாவதியான இருப்புக்கள் சரிசெய்யப்பட்டதன் பின்னரான ஆண்டின் இறுதியிலுள்ள இருப்பின் பெறுமதி ரூபா. 2,340,866 ஆகும். இந்த ஆண்டில் காலாவதியான மருந்துகளின் மொத்த பெறுமதி விற்பனை கிரயத்தில் சரிசெய்யப்பட்டிருக்கவில்லை. லங்கா ஹாஸ்பிடலின் செயற்பாட்டு நடைமுறை நியமத்தின் இருப்பிடல் கொள்கையின் (SOP-FIN-14) அத்தியாயம் 7.2.6 மற்றும் 7.6.2 ஆகியவற்றினை வைத்தியசாலை பின்பற்றவில்லை. | குறித்த காலாவதியான ரூபா. 6,600,998 மருந்துப்பொருட்கள் ஏற்கனவே HIS இல் தனிமைப்படுத்தலில் இருந்தன. எனவே இது ஆண்டின் இறுதி இருப்புக்களில் சேர்க்கப்படவில்லை. மேலும், இறுதி ஆண்டு இருப்பு அறிக்கையினுள் உள்ளடங்கியுள்ள 2023 திசெம்பர் 31 இல் காணப்படும் இருப்புக்களுக்கான இந்த ஆண்டுக்கான மதிப்பிழப்பு ரூபா. 3,386,110 ஆகும். | தனிமைப்படுத்தப்பட்ட இருப்புக்களின் பெறுமதி நிதி கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

## 1.8 கணக்காய்வுக்கு ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| காணப்படும் விடயம் | தொகை ரூபா. | சான்றுகள் இல்லாமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **உள்ளவாறான திரண்ட மீதிகள்** ஐந்து வியாபார கடன் கொடுத்தோர்கள், பதின்மூன்று ஏனைய கடன் கொடுத்தோர்கள் ,நிறுவனத்தின் வெளிநாட்டு வழங்குனர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணம், மூன்று செயற்திட்ட கடன் கொடுத்தோர்கள் , ஆலோசகருக்கு செலுத்த வேண்டிய மற்றும் வழங்குனரக்கு செலுத்த வேண்டிய பழைய காசோலை. | 37,708,695 | பதிவழிப்பதற்கும், திரும்ப எழுதுவதற்குமான காரணம் மற்றும் வயது பகுப்பாய்வு மற்றும் பணம் செலுத்தாத மற்றும் இணைக்கப்படாத காசோலை எண்களுக்கான ஆவணம் போன்றவற்றுக்கான விபரத் தகவல்கள் சமர்ப்பிக்கப் படவில்லை. | கணக்காய்வாளர் குழு மற்றும் இயக்குநர்கள் சபையின் உரிய அங்கீகாரத்துடன் கணக்காய்வாளர் (M/S KPMG) செய்த மீளாய்வின் பிரகாரம், பேரேட்டில் காணப்படும் நீண்ட நிலுவைத் தொகைகளின் அடிப்படையில் முகாமைத்துவ தீர்மானத்தின் பிரகாரம் பதிவழிப்பதற்கும் , திரும்ப எழுதுவதற்கும் இது எடுக்கப்பட்டுள்ளது. | பேரேட்டுக் கணக்கு நிலுவைகளில் ஏற்படும் மாற்றத்தை பாதிக்கும் காரணங்களை பதிவழிப்பதற்கும் ' திரும்ப எழுதுவதற்கும் முன்னர் அடையாளம் காணுதல் வேண்டும். |

## 1.9 பெறவேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | 2023 திசெம்பர் 31 உள்ளவாறான வியாபார கடன்பட்டோர் மீதி ரூபா. 380,309,584 ஆகும் மற்றும் சேத இழப்பின் கழிப்பனவு ரூபா. 54,455,825 ஆகும். வைத்தியசாலையின் கடன் சேகரிப்பு காலம் 30 நாட்களாக இருப்பதன் காரணமாக, 60 நாட்களுக்கும் மேலான கடன்களின் பெறுமதி ரூபா. 109,611,865 தொகை ஆகும். | கடன்பட்டோரின் முன்கொண்டு செல்லும் மீதி தொகைக்கு ஏதேனும் குறிகாட்டிகள் காணப்படம் போது எதிர்பார்க்கப்படும் சேதஇழப்பு (ECL) முறையைப் பயன்படுத்தி சேதஇழப்பு அங்கீகரிக்கப்படுகின்றது. | கடன் காலப்பகுதியில் உள்ள வைத்தியசாலை கட்டணங்களை மீள அறவீட செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| **(ஆ)** | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளின் மீதி ரூபா. 826,720,121 ஆகும் மற்றும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வியாபார கடன்பட்டோர்களின் மீதான சேத இழப்புக்கான கழிப்பனவு ரூபா. 3,120,490 ஆகும். வைத்தியசாலையிலிருந்து சிகிச்சை பெற்ற பின்னர் பல்வேறு காரணங்களுக்காக கட்டணத்தினை தீர்ப்பனவு செய்யாமல் வைத்தியசாலையை விட்டு வெளியேறிய நோயாளிகளின் தீர்ப்பனவு செய்யப்படாத வைத்தியசாலை கட்டணங்களினை சேத இழப்புக்கான மீதி உள்ளடக்கியுள்ளது. ரூபா.28,313,937 தொகையான வைத்தியசாலை கட்டணத்தினை அறவீட செய்வதற்கு வைத்தியசாலை சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது. பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. | கடன்பட்டோரின் முன்கொண்டு செல்லும் மீதி தொகைக்கு ஏதேனும் குறிகாட்டிகள் காணப்படம் போது எதிர்பார்க்கப்படும் சேதஇழப்பு (ECL) முறையைப் பயன்படுத்தி சேதஇழப்பு அங்கீகரிக்கப்படுகின்றது. இருப்பினும், கடன்பட்டோர் முழுமையாக மீட்க முடியாதவர் / பலவீனமடைந்தவர் என்பதை இது பிரதிபலிக்கவில்லை. | நிலுவைத் தொகையை விரைவாக அறவீட செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| **(i)** | இறந்த 07 நோயாளிகளுக்கான வைத்தியசாலைக் கட்டணத்தைச் செலுத்துவதற்கு குடும்ப உறுப்பினரினால் உத்தரவாதம் (இழப்பீட்டுக் கடிதம்) வழங்கப்பட்டதுடன் குறிப்பிட்ட நாட்களில் அவர்கள் உரிய கட்டணத்தைச் செலுத்தத் தவறியதன் காரணமாக வைத்தியசாலையால் அறவீடு செய்ய வேண்டிய வைத்தியசாலைக் கட்டணங்களின் பெறுமதி ரூபா. 10,730,427 ஆக காணப்பட்டது. | பதிவுகளின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 உள்ளவாறான இறந்த நோயாளிகளின் 9 தீர்ப்பனவு செய்யப்படாத ரூபா 10,730,427/- தொகையான கோரிக்கைகளில் உள்ள மீதிகள் இழப்பீட்டுக் கடிதங்களின் மூலம் விடுவிக்கப்பட்டன. | வைத்தியசாலை கட்டணத்தை வசூலிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| **(ii)** | போதிய பணம் இல்லாத காரணத்தால் செலுத்த முடியாத வைத்தியசாலைக் கட்டணத்தை, குறிப்பிட்ட திகதியில் செலுத்துவதற்கு குடும்ப உறுப்பினர் ஒருவரின் உத்தரவாதத’தினை (இழப்பீட்டுக் கடிதம்) வைத்து, 10 நோயாளிகளிடம் இருந்து அறவீடு செய்ய வேண்டிய வைத்தியசாலைக் கட்டணங்களின் பெறுமதி ரூபா.11,868,179 ஆக காணப்பட்டது. | பதிவுகளின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 உள்ளவாறான நோயாளிகளின் 10 தீர்ப்பனவு செய்யப்படாத ரூபா. 11,869,179 தொகையான கோரிக்கைகளில் உள்ள மீதிகள் இழப்பீட்டுக் கடிதங்களின் மூலம் விடுவிக்கப்பட்டன. | -மேற்படி- |
| **(iii)** | கப்பல் கம்பனியினால் கோரப்பட்டதன் பிரகாரம் இரண்டு கோவிட் நோயாளிகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர். ஆனால் நோயாளிகள் ரூபா. 1,427,737 தொகையான வைத்தியசாலை கட்டணத்தை செலுத்தவில்லை | இரண்டு கட்டணப் பட்டியல்களுக்குமான நிலுவைத் தொகையை அறவீட செய்வதற்கு தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | -மேற்படி- |
| **(iv)** | ஒரு நோயாளியின் ஆதனத்தை (2019 சனவரி 31 இல் இறந்தவர்) பறிமுதல் செய்வதற்கும் நிலுவைத் தொகையான ரூபா. 1,466,259 தொகையினை அறவீடு செய்வதற்கும் நீதிமன்றம் தீர்ப்பொன்றை வழங்கியது மற்றும் 05 வருடங்கள் நிறைவடைந்திருந்த போதிலும் வைத்தியசாலை கட்டணங்கள் வசூலிக்கப்படவில்லை. | வெலிசர நீதிமன்ற பதிவாளரிடம் இருந்து ஏலத்திற்கான ஆவணங்கள் மற்றும் நிலுவையில் உள்ள அறிக்கைகளை தீர்ப்பனவு செய்யும் செயற்பாட்டில் உள்ளோம். | -மேற்படி- |
| **(v)** | வைத்தியசாலை கட்டண நிலுவைத் தொகையினை அறவீட செய்வதற்க வைத்தியசாலையானது நீண்ட காலம் எடுத்துக் கொண்டதன் காரணமாக, பல சந்தர்ப்பங்களில், நோயாளியின் தொடர்புடைய தரப்பினர்கள் கட்டணபட்டியலினை கொடுப்பனவு செய்வதை தவிர்க்கிறார்கள். ரூபா.3,464,746 தொகையான வைத்தியசாலை கட்டணப் பட்டியல்கள் பதிவழிக்கப்பட்டிருந்தன. | இந்த கடன்பட்டோர் நிலுவைகளுக்கான அனைத்து பின்தொடர்தல் நடைமுறைகளும் எடுக்கப்பட்டுள்ளன, எவ்வாறாயினும் எங்களால் அறவீட செய்வதற்கு முடியவில்லை. இரு முனைகளிலிருந்தும் ஆதரவினை கண்காணிப்பதற்கான அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்தன. எனவே, சபையிடம் வழக்கை முன்வைத்தவுடன் நிலுவைகளை தள்ளுபடி செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. | வைத்தியசாலை கட்டணத்தை உடனடியாக அறவிட செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.10 வங்கி முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **பழைய காசோலை கணக்குகள் -(பிற செலுத்த வேண்டியவை)** காசோலைகள் மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது அரசாங்கத்தின் நிதிப்பிரமாணம் 396 போன்ற ஒரு முறைமையை வைத்தியசாலை அறிமுகப்படுத்தியிருக்காததுடன் அனைத்து பணம் பெறுபவர்களே தங்கள் காசோலைகளைப் பெற்றுக்கொள்வதற்கு வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டியுள்ளது. காசோலைகள் மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது ஆறு மாத காலப்பகுதியினுள் பணம் பெறுபவர்கள் தங்கள் காசோலைகளை சேகரிக்காததால் பழைய காசோலை கணக்கிற்கு மாற்றப்பட்ட தொகை ரூபா. 77,737,866 ஆகும். | அதனுடன் இருக்கும் மீதிகளில் சேகரிக்கப்பட்ட காசோலைகள் உள்ளடங்கிய போதிலும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. கணக்கீட்டுக் கொள்கையாக, காலாவதியான அனைத்து காசோலைகளையும் பழைய காசோலை கணக்கிற்கு மாற்றுகின்றோம். எனினும், குறிப்பிட்ட வழங்குநரால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் நாங்கள் புதிய காசோலைகளை வழங்கியுள்ளோம் அல்லது பழைய காசோலைகளை மீள செல்லுபடியாக்கியுள்ளோம். | அரசாங்கத்தின் நிதிப் பிரமாணங்களைப் போன்ற ஒரு முறைமையை அறிமுகப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.11 தகவல் தொழில்நுட்ப முறைமை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| எதிர்காலத்தில் தங்கள் உறவினர்களுக்கான மருத்துவ சிகிச்சைக்காக பராமரிப்பாளர்களால் வைத்தியசாலைக்கு முற்பணம் பெறப்பட்டது. வைத்தியசாலை தகவல் முறைமை (HIS) பட்டியலிடல் கட்டண முறைமை பல ஆண்டுகளாக இந்த தொகையை ”தடுக்கப்படாத வைப்பு” கணக்குகளில் வைப்புச் செய்துள்ளது. (குறிப்பிட்ட உரிய நோயாளிக்கு வைப்புத்தொகை ஒதுக்கீடு செய்யப்படவில்லை) மீதித் தொகை ரூபா. 40 மில்லியன் ஆகும் | குறிப்பிட்ட வைப்புத் தொகையின் பொருள் மற்றும் நேரத்தைக் கருத்தில் கொண்டு சரியான நேரத்தில் ஏனைய வருமானங்களாக நாங்கள் விதித்துள்ளோம். | அத்தகைய பெறவேண்டியவைகளை வைப்புச் செய்ய முறையான வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் மற்றும் அத்தகைய கணக்குகளை பேரேட்டில் செலுத்த வேண்டியவைகளாக பேணுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 1,203 பில்லியன் இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 1,209 பில்லியனாக காணப்பட்டதால் நிதி விளைவுகளில் ரூபா 6.906 மில்லியன் தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. நிர்வாக செலவினங்கள் ரூபா 436 மில்லியனால் அதிகரித்தமையே குறித்த வீழ்ச்சிக்கான காரணமாகும்.

### 2.3 முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகள்

கம்பனியின் முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகள் மற்றும் அதன் அடைந்துகொள்ளல்கள் பின்வருமாறுள்ளன.

| முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகள் | பாதீடு | உண்மை | உண்மை / பாதீடு *சதவீதம் |
|---|---|---|---|
| ஆலோசனைகளின் எண்ணிக்கை | 372,000 | 333,165 | 90% |
| உள் நோயாளிகளின் எண்ணிக்கை | 29,422 | 26,219 | 89% |
| OP/IP மாற்றல் விகிதம் | 7.9% | 7.9% | 100% |
| ஒரு உள் நோயாளிக்கான சராசரி வருமானம் | 266,329 | 305,725 | 115% |
| ஒரு வெளி நோயாளிக்கான சராசரி வருமானம் | 4,657 | 5,275 | 113% |
| அறை குடியிருத்தல் % | 77% | 74% | 97% |
| தங்குவதற்கான சராசரி நீளம் (நாட்கள் - மொத்தக் கட்டில்கள்) | 2.22 | 2.19 | 99% |
| GOT பயன்பாடு | 53% | 53% | 100% |
| CTOT பயன்பாடு | 32% | 28% | 88% |
| ஒரு குடியிருக்கப்பட்ட கட்டிலுக்கான ஊழியர்கள் | 8 | 8. | 100% |
| ஒரு குடியிருக்கப்பட்ட கட்டிலுக்கான தாதியர்கள் | 2 | 2. | 117% |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முறைமை மற்றும் கட்டுப்பாடுகளில் உள்ள பலவீனங்கள் காரணமாக, நிதிப் பிரிவினால் அறிமுகப்படுத்தப்பட்ட கழிவுகள் மற்றும் பணத்தைத் திரும்பப்பெறும் செயல்முறை காரணமாக வைத்தியசாலையின் கட்டண பட்டியலிடும் பிரிவில் இரண்டு உத்தியோகத்தர்களால் ரூபா. 3,185,718 பெறுமதியான தொகை மோசடியொன்று செய்யப்பட்டுள்ளதாக உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் மூலம் தெரியவந்துள்ளது. | நிதித் பிரிவினால் இந்த மோசடி அடையாளம் காணப்பட்டு, GCEO மற்றும் உள்ளக கணக்காய்வு பிரிவுக்கு தெரிவிக்கப்பட்டது. உள்ளக கணக்காய்வு பிரிவு நடவடிக்கையினை மேற்கொண்டு இதனை உள்ளக விசாரணைக் குழுவுக்குத் தெரிவித்துள்ளது. அதன் பிரகாரம், ஊழியர்கள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டு, பணத்தை மீள அறவீடு செய்வதற்கு தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.<br>ஓரளவு பணம் அறவீடு செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன. மேலும், இதுபோன்ற நிகழ்வுகள் மீண்டும் நிகழாமல் இருக்க மேலதிக கட்டுப்பாட்டு நடைமுறைகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. | பின்பற்றுதல் கட்டுப்பாட்டு நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும் மற்றும் கட்டுப்பாட்டு முறைமையானது நடைமுறை பரிசோதனையொன்றின் மூலம் தொடர்ந்து பரிசிலிக்கப்படுதல் வேண்டும். |

### 3.2 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| அ. | **மருத்துவ உபகரணங்களின் கொள்வனவு (CTG) Fetal Doppler இயந்திரம்.** **08/09/2023 அன்று ரூபா. 1, 540,000 விலையில் CTG இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டது.** Philips FM 20 Model CTG இயந்திரத்தை குழந்தை மருத்துவப் பிரிவுக்கு பயனர் கோரியதால் CTG இயந்திரத்தினை நேரடி ஒப்பந்த முறை மூலம் கொள்வனவு செய்ய வைத்தியசாலை திட்டமிட்டுள்ளது. பயனர் நேயத்தின் காரணமாக இறுதிப் பயனரால் வியாபார குறி (Brand ) அதன் பிரதானமாக கோரப்பட்டது. எவ்வாறாயினும், வழங்குனர் நாணயமாற்ற ஏற்ற இறக்கம் மற்றும் அவர்களின் கொள்கைகளுக்கு அமைவாக நிதியை மாற்றுவதில் உள்ள சிரமங்கள் காரணமாக விநியோகம் செய்யும் நிலையில் இல்லை.<br><br>பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| **(i)** | விலை மனு திறக்கப்பட்டதைத் தொடர்ந்து 2022 மே 28 அன்று நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிடம் விலைமனு ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டதற்கான ஆவணத் தகவல்கள் எதுவும் காணப்படவில்லை. 2022 யூன் 08 ஆம் திகதிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை மற்றும் 2022 யூலை 19 ஆம் திகதியிடப்பட்ட பெறுகை குழுவின் அறிக்கையின் பிரகாரம், தயாரிக்கப்பட்ட விபரக்குறிப்புகள் இறுதிப் பயனரின் தேவைப்பாடு மற்றும் வியாபார குறி யிலிருந்து கொள்வனவு செய்வதற்கான பரிந்துரை ஆகியவற்றுடன் இணங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே, இறுதிப் பயனருக்கான பரீட்சாத்தத்தினை செய்தன் பின்னர், Eden f6 மாதிரியின் CTG இயந்திரத்தில் பயனர் திருப்தி அடைந்துள்ளார். மேலும், கேள்வியிலுள்ள உபகரணங்களின் அதே பணியைச் செய்யக்கூடிய வெவ்வேறு வியாபார குறி பெயர்களில் ஒரே மாதிரியான உற்பத்திகள் சந்தையில் கிடைப்பதால், சிக்கணமான மற்றும் விளைதிறனான பெறுகை நடைமுறை மேற்கொள்ளப்பட்டதா என்பதை கணக்காய்வினால் உறுதிப்படுத்த முடியவில்லை. இதன் பிரகாரம், பெறுகை நடவடிக்கைகள் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளப்பட்டது என்பதை கணக்காய்வின் மூலம் உறுதிப்படுத்த முடியவில்லை | BECக்கான முகவரி கோப்புடன் தொடர்புடைய உடன்படிக்கை இணைக்கப்பட்டுள்ளது. FM 20 Model க்கான ஆரம்பக் கோரிக்கை மற்றும் பயனர் (HOD- Neonatology & Paediatrics) வழங்கிய நியாயப்படுத்தலை கருத்தில் கொண்டு தொடர வேண்டும், அதன்படி BEC உம் அதனை உறுதிப்படுத்தியது. | பெறுகை நடவடிக்கைகள் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளப்பட ல் வேண்டும். |
| **(ii)** | வைத்தியசாலையின் பெறுகை கையேட்டின் 5.7.4 ஆம் பந்திக்கு முரணாக விலைமனு ஆவணத்தில் செயற்பாட்டு கிரயம் மற்றும் வாழ்க்கை சுழற்சி கிரயம் பற்றிய உண்மைகள் மற்றும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்ட விலைமனு மதிப்பீட்டில் பொருந்தக்கூடிய ஏனைய கிரயங்கள் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | BOD அனுமதியின் கீழ் உள்ள இயந்திரங்களுக்கான அனைத்து தொடர்புடைய கிரயத்தையும் கருத்தில் கொண்டு LH விவரமான நிதி மதிப்பீடொன்றினை தயாரித்து வருகின்றது | வைத்தியசாலை பெறுகை வழிகாட்டியினை பின்பற்றுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(iii)** | பெறுகை குழு (PC) மற்றும் விலைமனு மதிப்பீட்டுக் குழு (BEC) உறுப்பினர்களுக்கான லங்கா ஹாஸ்பிடலின் பெறுகை கையேட்டு பிரகடனத்தின் 6.5 இன் பிரகாரம், PC கள் மற்றும் BEC களின் உறுப்பினர்களுடன் கூடுதலாக பெறுகை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மற்ற உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதமும் சேர்க்கப்படல் வேண்டும். அதே நேரம் அந்த பிரகடணங்கள் தொடர்புடைய கோவையில் காணப்படவில்லை. | ஆனால், இது தற்போது இது BEC & PC க்காக நெறிப்படுத்தப்பட்டுள்ளது. பணியாளர் பிரகடணங்கள் மனிதவளப் பிரிவில் கிடைக்கின்றன. | வைத்தியசாலை பெறுகை வழிகாட்டியினை பின்பற்றுதல் வேண்டும். |

**ஆ.** **துருப்பிடிக்காத உருக்கு Rack பெறுகை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| **(i)** | லங்கா ஹாஸ்பிடல் பெறுகை கையேட்டின் அத்தியாயம் 3.16 இன் பிரகாரம், 2022 திசெம்பர் 20 அன்று 25 துருப்பிடிக்காத உருக்கு ரேக்குகளை ரூபா 8,365,000.00 தொகைக்கு கொள்வனவு செய்வதற்கு முற்பண பிணைப்பத்திரம் இல்லாமல் ரூபா. 6,692,000 ரூபாயில் 80% வழங்குனருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தத்தின் அதிகபட்ச முற்பணம் 50% ஆகும். | முற்பணமாக 50% செலுத்தப்பட்ட பின்னர் 30% விடுவிக்கப்பட்டது. | வைத்தியசாலை பெறுகை வழிகாட்டியினை பின்பற்றுதல் வேண்டும். |
| **(ii)** | லங்கா ஹாஸ்பிடலின் பெறுகை கையேட்டின் 3.16 இன் பிரகாரம், 50% முன்பணம் செலுத்துவதற்கு GCEO அங்கீகாரம் வழங்குதல் வேண்டும், ஆனால் இந்த பெறுகைக்கான முற்பண கொடுப்பனவிற்கு முன்கூட்டியே GCEO இன் அங்கீகாரம் பெறப்படவில்லை | GCEO தலைமையில் PC யால் அங்கீகரிக்கப்பட்டது. | -மேற்படி- |
| **(iii)** | பெறுகை குழு (PC) மற்றும் விலைமனு மதிப்பீட்டுக் குழு (BEC) உறுப்பினர்களுக்கான லங்கா ஹாஸ்பிடலின் பெறுகை கையேட்டு பிரகடனத்தின் 6.5 இன் பிரகாரம், PC கள் மற்றும் BEC களின் உறுப்பினர்களுடன் கூடுதலாக பெறுகை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மற்ற உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதமும் சேர்க்கப்படல் வேண்டும். அதே நேரம் அந்த பிரகடணங்கள் தொடர்புடைய கோவையில் காணப்படவில்லை. | ஆனால், தற்போது அது சீரமைக்கப்பட்டுள்ளது. | வைத்தியசாலை பெறுகை வழிகாட்டியினை பின்பற்றுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| இ. | **ரூபா. 2,205,000 மொத்த கிரயத்தில் 10 KVS UPS பெறுகை**<br>பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| **(i)** | விலைமனு ஆவணத்தில் வெளிப்படுத்தப்பட்ட தேவைகளின் பிரகாரம் மதிப்பீடு மேற்கொள்ளப்படல் வேண்டும். அனைத்து தொடர்புடைய ஆவணங்களும் மதிப்பீட்டு அறிக்கையுடன் இணைக்கப்படல் வேண்டும் ஆனால் தொழில்நுட்ப விவரக்குறிப்பு ஒப்பீட்டு அட்டவணை இணைக்கப்படவில்லை. விலைமனு 2 வது குறைந்த விலைமனுதாரருக்கு வழங்கப்பட்டது மற்றும் விலைமனுதாரர் விவரக்குறிப்பு கோரிக்கை உள்ளடங்கிய அச்சிடப்பட்ட பிரசுரத்தை சமர்ப்பித்திருந்தார். விவரக்குறிப்பில் நாற்பத்தி ஏழு கூறுகள் உள்ளன மற்றும் இருபத்தி எட்டு மட்டுமே அடையாளம் காணப்பட்டுள்ளன. ஏனைய கூறுகள் அடையாளம் காணப்படவில்லை மற்றும் இது வைத்தியசாலையின் பெறுகை கையேட்டின் 5.7.1 ஆம் பந்திக்கு முரணாணதாகும். | வழங்பப்படவில்லை | வைத்தியசாலை பெறுகை வழிகாட்டியினை பின்பற்றுதல் வேண்டும். |
| **(ii)** | பெறுகை குழு (PC) மற்றும் விலைமனு மதிப்பீட்டுக் குழு (BEC) உறுப்பினர்களுக்கான லங்கா ஹாஸ்பிடலின் பெறுகை கையேட்டு பிரகடனத்தின் 6.5 இன் பிரகாரம், PC கள் மற்றும் BEC களின் உறுப்பினர்களுடன் கூடுதலாக பெறுகை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மற்ற உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதமும் சேர்க்கப்படல் வேண்டும். அதே நேரம் அந்த பிரகடணங்கள் தொடர்புடைய கோவையில் காணப்படவில்லை. | ஆனால், இது தற்போது இது BEC & PC க்காக நெறிப்படுத்தப்பட்டுள்ளது. பணியாளர் பிரகடணங்கள் மனிதவளப் பிரிவில் கிடைக்கின்றன. | வைத்தியசாலை பெறுகை வழிகாட்டியினை பின்பற்றுதல் வேண்டும். |
| ஈ. | **Surgical Head Lamp இன் பெறுகை (மின்கலத்துடன் செயற்படக்கூடியது)**<br><br>ஆலோசகரால் வழங்கப்பட்ட விருப்பமான வியாபார குறி மற்றும் மாதிரி மற்றும் விலை மனு உள்ளூர் முகவரிடமிருந்து அழைக்கப்பட்டது.<br>உள்ளூர் முகவர் சமர்ப்பித்த விலைமனுவினை மதிப்பிட்டுக்குழு உறுப்பினர்கள் பரிந்துரைத்தனர்.<br>எனவே விலைமனுதாரர் வைத்தியசாலையின் கோரிக்கைக்கு பதிலளித்தார். பெறுகைக் குழு நேரடி ஒப்பந்தத்தினை ரூபா. 1,575,000 பெறுமதிக்கு அங்கீகரித்திருந்தது.<br><br>பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| **(i)** | லங்கா ஹாஸ்பிடல்ஸ் கூட்டுத்தாபனத்தின் பெறுகை கையேட்டின் 2.5 ஆம் பந்தியின் பிரகாரம், போட்டித்தன்மையான பெறுகை முறையைக் காட்டிலும் ஒற்றை மூலத்திற்கான விலைமனு அதிக நன்மை கொண்டதாகவும் மற்றும் இறுதி பயனர் அல்லது விடயத்திற்கான நிபுணரின் சரியான நியாயப்படுத்துதல் முதலிய விதிவிலக்கான சூழ்நிலைகளில் மாத்திரம் இந்த | LH இன் இருதய அறுவை சிகிச்சை நிபுணரின் பயன்பாட்டிற்காக இருதய சத்திரசிகிச்சை கூடம் எழுப்பிய அவசரத் தேவையே இதற்குக் காரணாகும். அறுவை | வைத்தியசாலை பெறுகை வழிகாட்டியினை பின்பற்றுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விலைமனுவுக்கு ஒற்றை விலை முறை பயன்படுத்தப்படுகின்றது. மேலும், இறுதிப் பயனர் போட்டி விலைமனு முறையிலிருந்து வைத்தியசாலை நிதி ரீதியான பலன்களைப் பெறவில்லை என்பதனை நியாயப்படுத்தவில்லை. இதன் பிரகாரம், பெறுகை நடவடிக்கைகள் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளப்பட்டதனை கணக்காய்வின் மூலம் உறுதிப்படுத்த முடியவில்லை. | சிகிச்சை நிபுணரின் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்வதற்காக குறிப்பிட்ட மாதிரியானது பெறுகை செய்யப்பட்டது. | |
| **(ii)** | பெறுகை குழு (PC) மற்றும் விலைமனு மதிப்பீட்டுக் குழு (BEC) உறுப்பினர்களுக்கான லங்கா ஹாஸ்பிடலின் பெறுகை கையேட்டு பிரகடனத்தின் 6.5 இன் பிரகாரம், PC கள் மற்றும் BEC களின் உறுப்பினர்களுடன் கூடுதலாக பெறுகை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மற்ற உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதமும் சேர்க்கப்படல் வேண்டும். அதே நேரம் அந்த பிரகடணங்கள் தொடர்புடைய கோவையில் காணப்படவில்லை. | ஆனால், இது தற்போது இது BEC & PC க்காக நெறிப்படுத்தப்பட்டுள்ளது. பணியாளர் பிரகடணங்கள் மனிதவளப் பிரிவில் கிடைக்கின்றன. | வைத்தியசாலை பெறுகை வழிகாட்டியினை பின்பற்றுதல் வேண்டும். |
| **(iii)** | வைத்தியசாலையின் பெறுகை கையேட்டின் 5.7.4 ஆம் பந்திக்கு முரணாக விலைமனு ஆவணத்தில் செயற்பாட்டு கிரயம் மற்றும் வாழ்க்கை சுழற்சி கிரயம் பற்றிய உண்மைகள் மற்றும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்ட விலைமனு மதிப்பீட்டில் பொருந்தக்கூடிய ஏனைய கிரயங்கள் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | BOD அனுமதியின் கீழ் உள்ள இயந்திரங்களுக்கான அனைத்து தொடர்புடைய கிரயத்தையும் கருத்தில் கொண்டு LH விவரமான நிதி மதிப்பீடொன்றினை தயாரித்து வருகின்றது | வைத்தியசாலை பெறுகை வழிகாட்டியினை பின்பற்றுதல் வேண்டும். |
| உ. | **ரூபா. 2,925,000 மொத்த கிரயத்தில் ஐந்து Patient Warmer பெறுகை** | | |
| **(i)** | பெறுகை குழு (PC) மற்றும் விலைமனு மதிப்பீட்டுக் குழு (BEC) உறுப்பினர்களுக்கான லங்கா ஹாஸ்பிடலின் பெறுகை கையேட்டு பிரகடனத்தின் 6.5 இன் பிரகாரம், PC கள் மற்றும் BEC களின் உறுப்பினர்களுடன் கூடுதலாக பெறுகை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மற்ற உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதமும் சேர்க்கப்படல் வேண்டும். அதே நேரம் அந்த பிரகடணங்கள் தொடர்புடைய கோவையில் காணப்படவில்லை. | ஆனால், இது தற்போது இது BEC & PC க்காக நெறிப்படுத்தப்பட்டுள்ளது. பணியாளர் பிரகடணங்கள் மனிதவளப் பிரிவில் கிடைக்கின்றன. | வைத்தியசாலை பெறுகை வழிகாட்டியினை பின்பற்றுதல் வேண்டும். |
| **(ii)** | லங்கா ஹாஸ்பிடல்ஸ் கூட்டுத்தாபனத்தின் பெறுகை கையேட்டின் 3.2 இன் பிரகாரம், பெறுகை ஆவணங்களின் உள்ளடக்கம் கோவையில் சேர்க்கப்படல் வேண்டும். கணிசமான முறையில் பதிலளிக்கக்கூடிய விலைமனுதாரரை தேர்ந்தெடுப்பதற்கான பெறுகை ஆவணங்களின் அத்தியாவசிய உள்ளடக்கங்களுக்கு ஏற்ப விலை மனு உள்ளதா என்பதை சரிபார்க்க கோவையில் ஏல அழைப்புக்கான விலைமனு ஆவணங்கள் இல்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | விலைமனு ஆவணத்திற்கான அழைப்பிதழ் கோவையுடன் உள்ளது | வைத்தியசாலை பெறுகை வழிகாட்டியினை பின்பற்றுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(iii)** | லங்கா ஹாஸ்பிடலின் பெறுகை கையேட்டின் 3.13 இன் பிரகாரம், மிகவும் பதிலளிக்கக்கூடிய விலைமனுவைத் தேர்ந்தெடுப்பதற்கு பயனுள்ள காரணிகளைக் கருத்தில் கொண்டு விலைமனுவினை மதிப்பிடுவதற்கான அளவுகோல்கள் தீர்மானிக்கப்படல் வேண்டும், ஆனால், விலைமனுவினை மதிப்பிடுவதற்கான அளவுகோல்கள் தொடர்புடைய விலைமனுக்கான கோவையில் உள்ள்டக்கப்படவில்லை. | தொழில்நுட்ப விவரக்குறிப்புக்காக தயாரிக்கப்பட்ட ஆவணத்துடன் காணப்படுகின்றது. | வைத்தியசாலை பெறுகை வழிகாட்டியினை பின்பற்றுதல் வேண்டும். |
| **(iv)** | லங்கா ஹாஸ்பிடலின் பெறுகை கையேட்டின் 3.18 இன் பிரகாரம், ஒப்பந்தத்தில் நுழையும் நேரத்தில் ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் பிரகாரம் ஒப்பந்தங்களின் செயல்திறனை உறுதி செய்வதற்காக ஒரு செயலாற்றுகை பிணையொன்றினை சமர்ப்பிப்பதற்கு ஒப்பந்ததாரர்கள் உடன்படல் வேணடும், ஆனால், செயலாற்றுகை உத்தரவாதம் வழங்குநரிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை. | கையேட்டின் பிரகாரம், 05 மில்லியன் வரம்புகளுக்கு மேல் உள்ள கட்டளைகளுக்கு செயலாற்றுகை உத்தரவாதங்கள் பெறப்படும் (கையேடு குறிப்பு. 4.19) | செயலாற்றுகை பிணையினை வைத்தியசாலை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |
| **(v)** | வைத்தியசாலையின் பெறுகை கையேட்டின் 5.7.4 ஆம் பந்திக்கு முரணாக விலைமனு ஆவணத்தில் செயற்பாட்டு கிரயம் மற்றும் வாழ்க்கை சுழற்சி கிரயம் பற்றிய உண்மைகள் மற்றும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்ட விலைமனு மதிப்பீட்டில் பொருந்தக்கூடிய ஏனைய கிரயங்கள் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | BOD அனுமதியின் கீழ் உள்ள இயந்திரங்களுக்கான அனைத்து தொடர்புடைய கிரயத்தையும் கருத்தில் கொண்டு LH விவரமான நிதி மதிப்பீடொன்றினை தயாரித்து வருகின்றது | வைத்தியசாலை பெறுகை வழிகாட்டியினை பின்பற்றுதல் வேண்டும். |
| **ஊ**. | **ரூபா. 5, 187,000 மொத்த கிரயத்தில் Patient Monitors (13 அலகுகள்) பெறுகை** | விலைமனு திறத்தலுக்கான குறிப்புக்கள் கோவையுடன் காணப்படகின்றன. | வைத்தியசாலை பெறுகை வழிகாட்டியினை பின்பற்றுதல் வேண்டும். |
| **(i)** | பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்து விலை மனுக்கள் கோரப்பட்டன.<br>பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.<br><br>முழுமையான விலைமனு திறத்தலுக்கான குறிப்புக்கள் மற்றும் திறத்தலுக்கான விலைமனு ஆவணங்களை உரிய காலப்பகுதிக்குள் மதிப்பீட்டிற்கு சமர்பிக்கப்படுவதை உறுதிசெய்வது விலைமனு திறத்தல் குழுவின்<br>பொறுப்பாகும். லங்கா ஹாஸ்பிடலின் பெறுகை கையேட்டின் 4.5 மற்றும் 4.7 க்கு முரணாக, தொடர்புடைய கோவையில் அத்தகைய ஆவணத் தகவல்கள் எதுவும் இணைக்கப்படவில்லை. | | |
| **(ii)** | லங்கா ஹாஸ்பிடலின் பெறுகை கையேட்டின் 3.20 இன் பிரகாரம், ரூபா. 5 மில்லியனுக்கும் அதிகமான ஒப்பந்த பெறுமதிக்கு PE மற்றும் வழங்குனர்களுக்கு இடையேயான ஒப்பந்தத்தில் PE கைச்சாத்திடுதல் வேண்டும். ஆனால் இந்த ஒப்பந்தத்திற்காக வழங்குனருடன் எவ்வித ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | பெறுகை கையேட்டின் பிரகாரம்<br>இந்த குறிப்பிட்ட கட்டளை ரூபா 5 மில்லியன் தெகையினைத் விஞ்சியிருக்கவில்லை. | வைத்தியசாலை பெறுகை வழிகாட்டியினை பின்பற்றுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(iii)** | லங்கா ஹாஸ்பிடல் இன் பெறுகை கையேட்டின் 3.18 இன் பிரகாரம், ஒப்பந்தத்தில் நுழையும் நேரத்தில் ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் பிரகாரம் ஒப்பந்தங்களின் செயல்திறனை உறுதி செய்வதற்காக ஒரு செயலாற்றுகை பிணையொன்றினை சமர்ப்பிப்பதற்கு ஒப்பந்ததாரர்கள் உடன்படல் வேணடும், ஆனால், செயலாற்றுகை உத்தரவாதம் வழங்குநரிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை. | பெறுகை கையேட்டின் பிரகாரம் இந்த குறிப்பிட்ட கட்டளை ரூபா 5 மில்லியன் தெகையினைத் விஞ்சியிருக்கவில்லை. | வைத்தியசாலை பெறுகை வழிகாட்டியினை பின்பற்றுதல் வேண்டும். |
| **(iv)** | பெறுகை குழு (PC) மற்றும் விலைமனு மதிப்பீட்டுக் குழு (BEC) உறுப்பினர்களுக்கான லங்கா ஹாஸ்பிடலின் பெறுகை கையேட்டு பிரகடனத்தின் 6.5 இன் பிரகாரம், PC கள் மற்றும் BEC களின் உறுப்பினர்களுடன் கூடுதலாக பெறுகை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மற்ற உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதமும் சேர்க்கப்படல் வேண்டும். அதே நேரம் அந்த பிரகடணங்கள் தொடர்புடைய கோவையில் காணப்படவில்லை. | ஆனால், தற்போது அது சீரமைக்கப்பட்டுள்ளது. | வைத்தியசாலை பெறுகை வழிகாட்டியினை பின்பற்றுதல் வேண்டும். |
| **(v)** | வைத்தியசாலையின் பெறுகை கையேட்டின் 5.7.4 ஆம் பந்திக்கு முரணாக விலைமனு ஆவணத்தில் செயற்பாட்டு கிரயம் மற்றும் வாழ்க்கை சுழற்சி கிரயம் பற்றிய உண்மைகள் மற்றும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்ட விலைமனு மதிப்பீட்டில் பொருந்தக்கூடிய ஏனைய கிரயங்கள் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | BOD அனுமதியின் கீழ் உள்ள இயந்திரங்களுக்கான அனைத்து தொடர்புடைய கிரயத்தையும் கருத்தில் கொண்டு LH விவரமான நிதி மதிப்பீடொன்றினை தயாரித்து வருகின்றது | வைத்தியசாலை பெறுகை வழிகாட்டியினை பின்பற்றுதல் வேண்டும். |

எ. **PO NO 2302469 இன் கீழ் 2023 நவம்பர் 08 இல் ரூபா. 2,445,441 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட தொலைநோக்கி OES Elite 4mm 12 Degree HD Antoclavable WA2T4124 உபகரணங்கள்.**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| **(i)** | லங்கா ஹாஸ்பிடல்ஸ் கூட்டுத்தாபனத்தின் பெறுகை கையேட்டின் 2.5 ஆம் பந்தியின் பிரகாரம், போட்டித்தன்மையான பெறுகை முறையைக் காட்டிலும் ஒற்றை மூலத்திற்கான விலைமனு அதிக நன்மை கொண்டதாகவும் மற்றும் இறுதி பயனர் அல்லது விடயத்திற்கான நிபுணரின் சரியான நியாயப்படுத்துதல் முதலிய விதிவிலக்கான சூழ்நிலைகளில் மாத்திரம் இந்த விலைமனுவுக்கு ஒற்றை விலை முறை பயன்படுத்தப்படுகின்றது. மேலும், இறுதிப் பயனர் போட்டி விலைமனு முறையிலிருந்து வைத்தியசாலை நிதி ரீதியான பலன்களைப் பெறவில்லை என்பதனை நியாயப்படுத்தவில்லை. | குறிப்பிட்ட தொலைநோக்கி ஒலிம்பஸ் லேப்ராஸ்கோபி அமைப்புக்கானது ஆகும், மேலும் இரண்டும் ஒன்றுக்கொன்று இணக்கமுள்ளதாக இருக்க வேண்டும். | வைத்தியசாலை பெறுகை வழிகாட்டியினை பின்பற்றுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ii)** | இந்த வியாபார குறி பெயர்களின் கீழ் இந்த உபகரணங்களை கோருவதற்கு இறுதி பயனரின் குறிப்பிட்ட காரணங்களில் எவ்வித நன்மையான காரணங்களும் வழங்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. பெறுகை கையேடு விவரக்குறிப்பின் 3.2 ஆம் பந்தி தயாரிக்கப்படவில்லை. | கிடைப்பனவினை கருத்தில் கொண்டு மற்றும் அவசரத் தேவையின் காரணமாக Karl Storz வியாபார குறியிலிருந்து ஒரு தொலைநோக்கி கொள்வனவு செய்யப்பட்டது, இது லேப்ராஸ்கோபி அமைப்புடன் ஒரு பரீட்சாத்த நோக்கமாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் சில அறுவைசிகிச்சை நிபுணர்கள் லேப்ராஸ்கோபி முறைமையின் உண்மையான தேவைக்கு இணங்காததால் அதைப் பயன்படுத்துவதற்கு தயாராக இல்லை. | -மேற்படி- |

**3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருடன் ஒப்பிடும்போது 316 எண்ணிக்கையிலான உண்மையான பதவியணியினரின் பற்றாக்குறை காணப்பட்டது. தாதியர்களில் 123 வெற்றிடங்கள் உள்ளன. | பயிற்சி பெற்ற மற்றும் திறமையான விண்ணப்பதாரர்கள் இல்லாததால், செவிலியர் மற்றும் மருத்துவப் பிரிவுகளில் பற்றாக்குறைகள் ஏற்பட்டுள்ளது. . | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி அவ்வப்போது மதிப்பாய்வு செய்யப்பட்டு நியமனங்கள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். |